*28*

# இயேசுவின் அதிகாரத்திற்கு ஒரு அறைகூவல்

## (12:22-37)

*ஒரு குறுகிய இடைச் செய்திக்குப்பின்பு (12:15-21), இயேசுவுக்கும் பரிசேயர்களுக்குமிடையே நடந்த வாக்குவாதத்தை விளக்கப்படுத்தும்படி மத்தேயு திரும்புகிறார். இந்த அதிகாரத்தின் முன்பகுதியில் இந்த இரண்டு பிரிவினருக்கும் இடையில் ஓய்வுநாளைக் குறித்த மோதலை உட்படுத்தி யிருந்தது (12:1-14). இப்பொழுது, இயேசு எந்த அதிகாரத்தினால் அற்புதங்களைச் செய்தார் என்பதை மையம் வைத்து விவாதம் எழும்புகிறது (12:22-37).*

### *பரிசேயர்களின் தவறான குற்றச்சாட்டு (12:22-24)*

***[22]அப்பொழுது, பிசாசுபிடித்த குருடும் ஊமையுமான ஒருவன் அவரிடத்தில் கொண்டுவரப்பட்டான்; குருடும் ஊமையுமானவன் பேசவும் காணவுந்தக்கதாக அவனை சொஸ்தமாக்கினார்.***

***[23]ஜனங்களெல்லாரும் ஆச்சரியப்பட்டு: தாவீதின் குமாரன் இவர்தானோ? என்றார்கள்.***

***[24]பரிசேயர் அதைக் கேட்டு: இவன் பிசாசுகளின் தலைவனாகிய பெயெல் செபூலினாலே பிசாசுகளைத் துரத்துகிறானேயல்லாமல் மற்றபடியல்ல என்றார்கள்.***

***வசனம் 22.** பிசாசு பிடித்திருந்த ஒரு மனுஷன், பார்க்கவோ பேசவோ முடியாமல் இருந்தவன் **இயேசுவினிடத்தில் கொண்டு வரப்பட்டான்.** அந்த மனுஷருடைய இரண்டு நிலைகளுமே - குருடும் ஊமையும் - பிசாசினால் நேரடியாக பிடித்ததின் விளைவு என்பது தெளிவாக புரிந்து கொள்ளப்பட்டிருந்தது (9:32ன் விளக்கவுரையைக் காண்க). பிசாசை விரட்டியதன் மூலம், இயேசு அந்த மனுஷனை **சுகமாக்கினார்**, அவனுடைய பார்வையும் பேச்சும் அவனுக்குத் திரும்பியது.*

***வசனம் 23. கூடிவந்திருந்தவர்கள் ஆச்சரியப்பட்டனர்** (existēmi), அல்லது நடந்த அற்புதத்தைப் பார்த்து முற்றிலும் வியப்படைந்தார்கள், இந்தக் கூட்டத்தில் இருந்தவர்களில் அநேகர் இயேசு செய்த மற்ற அற்புதங்களைப் பார்த்திருக்கக் கூடும், ஆகிலும் இது அவர்களை வியப்பில் ஆழ்த்தியது.*

*ஜனங்கள் இயேசுவின் அற்புதத்தினால் ஆச்சரியத்தில் மூழ்கியிருந்த வேளையில் இயேசு யார் என்று அவர்களால் உறுதியாகவோ சரியாகவோ*

கணிக்க முடியவில்லை (காண்க யோவான் 7:12, 40-43; 10:19-21). அவரது பின்னணியில் இருந்த வல்லமை அவரே வாக்குத்தத்தம் செய்யப்பட்ட மேசியா என சுட்டிக் காட்டியது. இருப்பினும், அவர்கள் இயேசுவைப் பார்த்தபொழுது, சுற்றித்திரிந்து ஊழியம் செய்யும் இந்தப் பிரசங்கியார் எளிமையான தச்சனுடைய குமாரன் தானா தேவனால் வாக்குத்தத்தம் பண்ணப் பட்டவராயிருக்கக் கூடும் என்பது அவர்களுடைய கேள்வி. கூட்டத்தின் உறுதியற்ற நிலை பரிசேயர்களின் வருகையால் கூடுதல் செல் வாக்கைப் பெற்றிருக்கக் கூடும் (காண்க யோவான் 7:13; 9:22; 19:38).

**தாவீதின் குமாரன்** எனும் சொற்றொடர், மேசியா எனும் பட்டம், பழைய ஏற்பாட்டின் அடிப்படையிலிருந்து (வேரிலிருந்து) வந்த ஒன்று (2 சாமுவேல் 7:12-16; சங்கீதம் 89:3, 4; ஏசாயா 9:6, 7; எரேமியா 23:5) இப்பதம் மத்தேயுவில் அநேகமுறை குறிப்பிடப் படுகிறது (1:1ன் விளக்கவுரையைக் காண்க).[1]

**வசனம் 24. பரிசேயர்கள்** இரட்சகரினிமித்தம் ஆச்சரியப்பட்டதால் கலக்கமடைந்தார்கள். அவர்கள் காட்டிய கவனம் பெயெல்செபூலாகிய **பிசாசுகளின் தலைவனின் வல்லமையைக்** கொண்டு இயேசு **பிசாசுகளை** துரத்துகிறார் என்ற தேவதூஷணம் என்பதையும் மாறாக தேவனுடைய வல்லமையால் மட்டுமே அந்த அற்புதங்கள் நடக்கின்றன என்பதையும் ஜனங்கள் உணரத் தூண்டியது (காண்க 9:33, 34; 10:25ன் விளக்கவுரையைக் காண்க). "பெயெல் செபூல்" என்னும் பெயர் சாத்தானுக்கு யூதர்கள் குறிப்பிட்ட பெயர், அவனைத் தான் இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது என்பது தெளிவு. பரிசேயர்கள் தாங்களே அற்புதங்களை மறுக்க முடியாமல் இருந்த படியால், அவர்கள் தங்களுடைய வார்த்தையின் மூலக்கூறுக்கே பங்கம் வந்து விட்டதாகக் கருதுகின்றனர். அவர்களின் நோக்கமெல்லாம் கிறிஸ்துவின் நற்பெயரை அழித்து[2] ஜனங்களுக்குள்ளாக இருக்கிற பிரசித்தமான ஏற்புடமை யைக் கெடுக்க வேண்டும் என்பதுதான்.

## இயேசு தமது அதிகாரத்தைத் தற்காத்தல் (12:25-30)

***25இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்து, அவர்களை நோக்கி: தனக்குத்தானே விரோதமாய் பிரிந்திருக்கிற எந்த இராஜ்யமும் பாழாய்ப்போம்; தனக்குதானே விரோதமாய் பிரிந்திருக்கிற எந்தப் பட்டணமும், எந்த வீடும் நிலை நிற்கமாட்டாது.***

***26சாத்தானை சாத்தான் துரத்தினால் தனக்கு விரோதமாகத்தானே பிரிவினை செய்கிறதாயிருக்குமே; அப்படிச் செய்தால் அவன் இராஜ்யம் எப்படி நிலை நிற்கும்?***

***27நான் பெயெல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்தினால், உங்கள் பிள்ளைகள் அவைகளை யாராலே துரத்துகிறார்கள்? ஆகையால் அவர்களே உங்களை நியாயந்தீர்க்கிறவர்களாயிருப்பார்கள்.***

***28நான் தேவனுடைய ஆவியினால் பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய இராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே.***

***29அன்றியும் பலவானை முந்திக் கட்டினாலொழியப் பலவானுடைய வீட்டுக்குள் ஒருவன் புகுந்து, அவன் உடைமைகளை எப்படிக் கொள்ளையிடக் கூடும்? கட்டினானேயாகில், அவன் வீட்டைக் கொள்ளையிடலாம்.***

***[30]என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்; என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்.***

***வசனம் 25.*** *பெயெல்செபூலின் வல்லமையினால் இயேசு பிசாசுகளைத் துரத்துகிறார் என்கிற - பரிசேயர்களின் குற்றச்சாட்டு (12:24) - இயேசுவிடம் நேரடியாகப் பேசப்படவில்லை. கூடிவந்த கூட்டத்திலிருந்து கேட்ட சத்தமாக பேசப்பட்டது.* ***இயேசு*** *அவர்களுடைய வார்த்தைகளை கேட்கவில்லை, ஆனால்* ***அவர்களுடைய எண்ணங்களை*** *அவர் வாசித்தார் (காண்க 9:4; யோவான் 2:24, 25).*

*முதல் கட்டமாக இயேசு பரிசேயர்களின் அறிவிற்கப்பாற்பட்ட குற்றச் சாட்டைச் சுட்டிக்காட்டினார். அவர் மூன்று உதாரணங்களான* ***இராஜ்யம், பட்டணம்*** *மற்றும்* ***வீட்டை*** *குறிப்பிட்டு அவைகளின் நிலைத்தன்மையைப்பற்றி குறிப்பிட்டார். அனைத்து ஒப்பீடுகளும் ஜனங்களைக் குறிப்பிட்டு பேசுபவை: இராஜ்யத்தின் குடிமக்கள், பட்டணத்தின் வாசிகள், குடும்பத்தின் (வீட்டின்) அங்கத்தினர்கள். இவைகளில்* ***எந்த ஒன்று தனக்குத் தானே பிரிந்திருந்தாலும், அது நிலைநிற்கமாட்டாது.*** *கிரேய்க் எஸ். கீனர் இந்த வார்த்தை மொழி பழமொழியாக இருக்கலாம் என்று நினைத்தார்.[3] உள் சச்சரவுகள் அழிவுக்கே இட்டுச் செல்லும் என்பது நன்கறிந்த உண்மை, இயேசுவுக்கு முன் நின்ற கூட்டம் வேதனையோடு புரிந்து கொண்டிருந்த உண்மைதான் இது. பழைய ஏற்பாட்டு இஸ்ரவேலின் இராஜ்யம் சாலொமோனுக்குப் பின்பு பிளவு ஏற்பட்டது (1 இராஜாக்கள் 12:1-24), மற்றும் இரண்டாக இராஜ்யம் பிளவு பட்டு போனதினால் அசீரியர்கள் மற்றும் பாபிலோனியர்களின் சிறை பிடிப்புக்கு உள்ளாகின (2 இராஜாக்கள் 18:9-12; 25:1-21).*

***வசனம் 26.*** *அந்த உண்மையை இயேசு விளக்கப் படுத்தின பின்பு, கண்முன் நிற்கும் சூழ்நிலையை பயன்படுத்துகிறார்:* ***சாத்தானை சாத்தான் துரத்தினால், தனக்கு விரோதமாகத் தானே பிரிவினை செய்கிறதாயிருக்குமே; அப்படிச் செய்தால் அவனுடைய இராஜ்யம் எப்படி நிலை நிற்கும்?*** *இது சாத்தானை முற்றிலும் அறிவில்லாதவனாகக் காட்டும், அவனோ தந்திரமுள்ளவனும் மிகவும் புத்திக்கூர்மை மிக்கவனுமாவான் (ஆதியாகமம் 3:1; 1 பேதுரு 5:8). எனவே தனக்குதானே எதிராக செயல்படமாட்டான். ஜனங்களை உபத்திரவப் படுத்தும்படிக்கு பிசாசுகளை அனுப்பியிருக்கும்போது தனக்குத்தானே தோல்வியுண்டாகத் தக்கதாக அவன் ஏன் அவைகளைத் துரத்த வேண்டும்?*

*இயேசுவின் கேள்விமூலம் சாத்தானுக்கு ஒரு "இராஜ்யம்" உண்டு என்கிற உண்மை வெளிப்படுகிறது. பவுல் இதை "சாத்தானின் அதிகாரம்" என்று குறிப்பிட்டார் (நடபடிகள் 26:18). மற்றும் "இருளின் அதிகாரம்" என்றார் (கொலோசெயர் 1:13). கிறிஸ்தவர்களின் போராட்டமெல்லாம் சாத்தானின் இராஜ்யமாகிய - "துரைத்தனங்கள்," "அதிகாரங்கள்," "இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகள்," மற்றும் "வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகள்" ஆகியவைகளோடு - போராட்ட முண்டு (எபேசியர் 6:12).*

***வசனம் 27.*** *தீர்ப்பு செய்கிற விஷயத்திலே பரிசேயர்களின் முன்னுக்குப்பின் முரணாகப் பேசும் பரிசேயர்களைக் குறித்து கிறிஸ்து தொடர்ந்து விளக்கமளிக்கிறார். அவர்கள் அவரைக்குற்றப்படுத்தி* ***பெயெல் செபூலினால் பிசாசுகளைத்*** *துரத்துவதாக குறிப்பிட்டனர். அதற்குப்*

*பிரதியுத்தரமாக, இயேசு அவர்களிடம் கேட்கிறார்,* ***உங்கள் பிள்ளைகள் யாரால் அவைகளைத் துரத்துகிறார்கள்?*** *இந்தப் "பிள்ளைகள்" பரிசேயர்களைப் பின்பற்றிப்போன குறிப்பிட்ட சீஷர்கள் அல்லது பின்செல்லுவோர், அவர்கள் பிசாசுகளைத் துரத்தும் வல்லமைத் தங்களுக்கு இருப்பதாகக் கூறினார்கள்.*[4] *அவர்கள் இப்படிச் செய்வதாக உரிமை கொண்டாடும்போது அதே காரியத்தை தாம் செய்தால் மாத்திரம் சாத்தானுடன் இணைந்து செயல்படுவதாக ஏன் குற்றஞ் சாட்டப்பட வேண்டும் என்று இயேசு கேட்டார். பரிசேயர்களின் இந்த சீஷர்கள் சாத்தானின் வல்லமைகளைக் கொண்டு பிசாசுகளைத் துரத்துகிற சடங்காச்சாரங்களைச் செய்வதாக குற்றஞ்சாட்டவில்லை. அப்படியிருக்கும்போது, ஏன் இயேசு குற்றஞ்சாட்டப்பட வேண்டும்?* ***அவர்களே உங்களை நியாயத்தீர்க்கிறவர்களாக இருப்பார்கள்*** *என்பது எந்த அளவினால் பரிசேயர்கள் தங்கள் சீஷர்கள் பிசாசுகளைத் துரத்துவதை மதிப்பிடுகிறார்களோ, நியாயமாக, அதே அளவினால்தான் இயேசு பிசாசுகளைத் துரத்துவதையும் மதிப்பிட வேண்டும்.*

***வசனம் 28.*** *தர்க்கரீதியாகப் பார்த்தாலும், இயேசுவின் சத்துருக்கள் ஒன்று பிசாசுகளைத் துரத்துகின்ற விஷயத்தில் யூதர்கள் மோசடிவேலை செய்வதாக ஒப்புக்கொள்ள வேண்டும் அல்லது இயேசு அவர்கள் செய்கிற அதே அதிகாரத்தினாலே, தேவனுடைய வல்லமையினாலே* ***துரத்துகிறார்*** *என்கிற ஏற்புடைமைக்கு வரவேண்டும். இயேசு அவர்களுக்குக் குறிப்பாக, அவர் தாம் உண்மையாகவே* ***தேவனுடைய ஆவியின் வல்லமையைப்*** *பயன்படுத்திச் செய்தால்,* ***தேவனுடைய இராஜ்யம்*** *அவர்கள் நடுவில் வந்துவிட்டது என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சுட்டிக்காட்டினார். "தேவனுடைய ஆவியினால்" என்பதற்குப் பதிலாக "தேவனுடைய விரலினால்" என்று லூக்கா குறிப்பிடுகிறார் (லூக்கா 11:20; காண்க யாத்திராகமம் 8:19; 31:18; சங்கீதம் 8:3).*

*"தேவனுடைய இராஜ்யம்" எனும் சொற்றொடர், மத்தேயு எழுதின சுவிசேஷத்தில் நான்கு முறைமட்டுமே காணப்படுகிறது (12:28; 19:24; 21:31, 43). மத்தேயு உபயோகிக்கும் பிரசித்தமான பதம் "பரலோக இராஜ்யம்." ஒரே நிறுவனத்துக்கு பயன்படுத்தப்பட்ட இரண்டு வித்தியாசப்பட்ட தலைப்புகள். இராஜ்யம் பரலோகத்தில் ஸ்தாபிதம் பெற்று தேவனுக்குரியதாயிருக்கிறது. இன்று அது பரலோகத்திலுள்ள தமது சிங்காசனத்திலிருந்து அவரது குமாரனால் ஆளுகை செய்யப்படுகிறது (நடபடிகள் 2:22-36). சபைதான் இராஜ்யம் (16:18, 19). பெந்தெகொஸ்தே நாள்வரை இராஜ்யம் ஒரு அமைப்பாக ஸ்தாபிதம் பெறவில்லை, இப்பொழுது கிறிஸ்துவின் பலத்த செய்கைகளால் உலகத்திற்குள்ளாக ஸ்தாபிதம் பெற்றுள்ளது.*

***வசனம் 29.*** *இயேசு தம்முடைய வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களிடம் ஒரு சிறிய உவமையாக ஒரு* ***பலவானின்வீடு*** *கொள்ளையாடுவது குறித்துப் பேசுகிறார் (காண்க ஏசாயா 49:24-26). அவன்* ***முந்தி கட்டப்பட்டாலொழிய*** *இது சாத்தியமல்ல. இந்தக் கதையில் குறிப்பிடப்படும்* ***பலவான்*** *தெளிவாக சாத்தானைக் குறித்துப் பேசுகிறது. அவனுடைய வீடு அவனுடைய இராஜ்யத்தை, அதாவது, அவனுடைய அதிகாரத்தின் கீழ் இருக்கிற உலகத்தைக் குறிப்பிடுகிறது.* ***அவனுடைய உடைமைகள்*** *பிசாசு குடிகொண்டிருக்கும் மக்களை குறிப்பதாக உள்ளது.*

உடமைகள் என்பதற்கான கிரேக்க வார்த்தை (*skeuos*) "சொத்து" எனப்படும். அதை "பாத்திரங்கள்" என்றும் மொழிபெயர்க்கலாம். பொருட்களோடு கூட மனித சரீரங்களைக் குறிப்பிட சிலவேளைகளில் அது பயன்படுத்தப்படும் (நடபடிகள் 9:15; 2 கொரிந்தியர் 4:7; 1 தெசலோனிக்கேயர் 4:4; 2 தீமோத்தேயு 2:20, 21; 1 பேதுரு 3:7). வளைந்து கொடுக்கும் தன்மைபெற்ற இந்தப் பதம் இயல்பாக இந்த உவமையில் விசேஷமாகப் பயன்படுகிறது.

சாத்தானை இயேசு முதலில் கட்டினாலொழிய அவனுடைய அதிகாரத்திற்குள் அவர் **புக** முடியாது (காண்க வெளிப்படுத்தின விசேஷம் 20:2). **கட்டுதல்** எனும் வார்த்தை கிரேக்க மொழியில் டியோ (*deō*) என்றழைக்கப்படுகிறது. அதன் பொருள் "கட்டுப்படுத்துதல்" அல்லது "ஒரு எல்லைக்கு உட்படுத்துதல்." சாத்தானுடைய முழு அதிகாரத்தையும் அவன் இழந்து போயிருக்கிறான் என்பது இதன் பொருள் அல்ல. மேற்குறித்த உவமையில் இயேசு சாத்தானின் அதிகாரத்தைத் தாக்குவதை மட்டுமே குறிக்கிறது, அப்படித்தாக்கி அவனுக்கு கீழானவர்களை கொள்ளைப் பொருளாகக் கொண்டு வருதல். பிசாசினால் மேற்கொள்ளப்பட்டவர்களின் வாழ்வை கர்த்தர் திருப்பிக் கொண்டுவந்து கொண்டிருந்தார்.

**வசனம் 30. என்னோடிராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்** என்று இயேசு தனது வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்தோரிடம் எச்சரித்தார். ஒன்றேல் இயேசு தேவனுடைய பரிசுத்த ஆவியின் வல்லமையினாலே தமது அற்புதங்களை நடப்பித்தார் என்று ஒருவர் விசுவாசிக்க வேண்டும், அல்லது அவர் பிசாசின் வல்லமையால்தான் செய்கிறார் என்று சொல்ல வேண்டும். இயேசுவின் விஷயத்தில் யாரும் நடுநிலை வகிக்க முடியாது. ஒன்றேல் அவர் தம்மை யாரென்று குறிப்பிட்டாரோ அவராக இருக்க வேண்டும், அல்லது எண்ணிக்கையற்ற முறையில் உலகில் தோன்றியுள்ள கள்ளத்தீர்க்கதரிசிகளில் ஒருவராக இருக்க வேண்டும். தனிப்பட்ட ஒவ்வொருவரும் ஒன்றேல் அவருக்காக நிற்க வேண்டும், அல்லது அவன் அவருக்கு எதிராக இருக்க வேண்டும் (10:32, 33).

கிறிஸ்து மேலும் சொன்னார், **என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்.** இதற்கு முன்பு சொல்லப்பட்ட வசனப்பகுதிகளில் குறிப்பிட்டபடியாக (9:36; 10:6, 16), அவரது பாஷை ஆடுகளின் மேய்ப்பனுடைய வார்த்தைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது (1 இராஜாக்கள் 22:17; ஏசாயா 40:11; எரேமியா 31:10; எசேக்கியேல் 34:11-16; மீகா 2:12; நாகூம் 3:18; சகரியா 13:7). மேய்ப்பன் இயேசுவுடன் சேர்ந்து பணியாற்றி அவருடைய ஆடுகளை அவரிடமாய்ச் சேர்க்கிறான் அல்லது இயேசுவுக்கு எதிராய் பணியாற்றி அவைகளை வித்தியாசப்பட்ட திசைகளில் சிதறடிக்கிறான்.

## ஆவியானவருக்கு விரோதமான தூஷணம் (12:31, 32)

**31 ஆதலால், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; எந்தப் பாவமும் எந்தத் தூஷணமும் மனுஷருக்கு மன்னிக்கப்படும்; ஆவியானவருக்கு விரோதமான தூஷணமோ மனுஷருக்கு மன்னிக்கப் படுவதில்லை.**

**[32]எவனாகிலும் மனுஷ குமாரனுக்கு விரோதமான வார்த்தை சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்; எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசினால் அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை.**

*வசனம் 31.* இயேசு தமது முடிவான நியாயத்தீர்ப்பைக் குறிப்பிட்டு பேசும் **பாவம்** பெரும்பாலும் "மன்னிக்கப்பட முடியாத பாவம்" என்றே அழைக்கப்படுகிறது. வேதாகமம் இந்தப் பதத்தை பயன்படுத்துவதில்லை, ஆகிலும் இயேசு, **பாவம் மன்னிக்கப்படுவதில்லை** என்று சொன்னார். இது என்ன பாவம்? பரிசேயர்கள் அப்படி என்ன செய்தனர்? பரிசுத்த ஆவியின் வல்லமையை பிசாசுக்கு குறிப்பிட்டனர். ஆவியானவரால் நடப்பிக்கப்பட்ட அற்புதங்களை - இயேசு பிசாசுகளை விரட்டினதுபோன்ற அற்புதங்களை - ஒரு "அசுத்த ஆவி" அல்லது "பொல்லாங்கான" ஆவி நடப்பித்ததாக குறிப்பிட்டனர் (மாற்கு 3:30). ஆகையால் பரிசுத்த ஆவியானவருக்கு எதிராக தேவதூஷணம் சொன்னார்கள், அதன் சுருக்கமான அர்த்தத்தில் சொன்னால், **தேவதூஷணம்** (*blasphēmia*) என்பது தெய்வத்தை இழிவான வார்த்தைகளால் விமர்சிப்பது.

இயேசு பரிசுத்த ஆவிக்கு எதிரான தேவதூஷணம் குறித்து கொடுத்த எச்சரிக்கை பழைய ஏற்பாட்டு சட்டதிட்டங்களுக்கு துணிகரமாய் எதிராகச் செய்பவர்கள் மீது வரும் பாதிப்புக்குட்பட்டது. எண்ணாகமம் 15:30 சொல்லுகிறது, "அன்றியும் தேசத்திலே பிறந்தவர்களிலாகிலும் அந்நியர்களிலாகிலும் எவனாகிலும் துணிகரமாய் யாதொன்றைச் செய்தால், ['துணிகரமாய்' என்பது கையை எதிராகத் தூக்குகிறவன் (RSV)], அவன் கர்த்தரை நிந்திக்கிறான்; அந்த ஆத்துமா தன் ஜனத்தாரில் இராதபடிக்கு அறுப்புண்டு போகவேண்டும் என்று உள்ளது." உபாகமம் 29:20லும் கூட விக்கிரகாராதனை செய்பவனும் கலகக்காரனுமான மனிதனை தேவன் "ஒருபோதும் மன்னிக்க சித்தமுள்ளவராயிருக்கமாட்டார்"; "கர்த்தர் அவன் பேரை வானத்தின் கீழ் இராதபடிக்கு குலைத்துப் போடுவார்" என்று சொல்லப்படுகிறது.

*வசனம் 32.* **மனுஷ குமாரனுக்கு விரோதமான வார்த்தை சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்,** என்று இயேசு சொன்னார். பின்னதாக, பேதுரு கர்த்தரை மூன்றுமுறை மறுதலித்தான், இருந்தும் அவரால் மன்னிப்பு பெற்றான், ஊழியத்திற்கென மீட்கப் பட்டான் (26:69-75; யோவான் 21:15-17). பவுல், "தூஷிக்கிறவனும், துன்பப்படுத்துகிறவனும், கொடுமை செய்கிறவனுமாயிருந்தும்" கூட பாவமன்னிப்பைக் கண்டடைந்தான் (1 தீமோத்தேயு 1:13; காண்க நடபடிகள் 9:1, 2).

அப்படியிருந்தும், பரிசுத்த ஆவிக்கு விரோதமாய் எவனாகிலும் தூஷணம் பேசினால் அவனுக்கு பாவமன்னிப்பு சாத்தியமில்லை. இந்தப் பாடப்பகுதி கடினமான அநேக வசனப்பகுதிகளில் ஒன்று, பாவமன்னிப்பை பெறமுடியாத நிலையை எடுத்துரைக்கிறது (எபிரெயர் 6:4-6; 10:26-31; 1 யோவான் 5:16, 17). மெக்கார்வே இந்தப் பாவம் விசுவாசத்தின் அடிப்படையையே புறந்தள்ளுவதாக நினைத்தார்:

> மனுஷ குமாரனுக்கு எதிராக ஒருவன் தேவதூஷணம் பேசுவதைக் காட்டிலும் பரிசுத்த ஆவிக்கு எதிரான தூஷணம் ஏன் மிக நிச்சயமான சாபத்துக்குரியது, என்பது நமது சிற்றறிவுக்கு ஒருவேளை எட்டாத ஒன்றாக

இருக்கலாம்; ஆகிலும், முதலாமவருக்கு விரோதமாக ஒருவன் பேசும்போது பரிசுத்த ஆவியின் சாட்சியத்தினால் மனது உறுத்தப்பட்டு, மீண்டுமாக விசுவாசியாகக் கூடும். ஆனால் அவன் பரிசுத்த ஆவியினால் கொடுக்கப்பட்ட சாட்சியத்தை புறம்தள்ளி அது சாத்தானுக்குரியதாக பேசுவானானால், விசுவாசத்திற்கான அடிப்படையையே அவன் புறந்தள்ளுகிறான்; மேலும் விசுவாசமில்லாமல் பாவமன்னிப்பு இல்லை.[5]

*ஆகையால், "பாவம் மன்னிக்கப்பட மாட்டாது," என்று இயேசு சொன்னபோது அவருடைய அற்புதத்தை பெயெல்செபூலின் (சாத்தானின்) வல்லமையால் நடப்பித்தார் என்று சொல்லி அவரது ஊழியத்தையே அழிக்க முற்பட்ட பரிசேயர்களைப் பார்த்து அப்படிச் சொன்னார்.*

## *மரமும் அதின் கனியும் (12:33-37)*

***33மரம் நல்லதென்றால், அதின் கனியும் நல்லதென்று சொல்லுங்கள்; மரம் கெட்டதென்றால் அதின் கனியும் கெட்டதென்று சொல்லுங்கள்; மரமானது அதின் கனியினால் அறியப்படும்.***

***34விரியன் பாம்புக் குட்டிகளே, நீங்கள் பொல்லாதவர்களாயிருக்க, நலமானவைகளை எப்படிப் பேசுவீர்கள். இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்.***

***35நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக் காட்டுகிறான், பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக் காட்டுகிறான்.***

***36மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.***

***37ஏனெனில் உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய்.***

***வசனம் 33.*** *ஆரம்பத்தில், இயேசு மலைப்பிரசங்கத்தில் கள்ளப்போதகர்களைப் பற்றி குறிப்பிட்டார், "அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள் ... நல்ல மரம் கெட்ட கனிகளை கொடுக்க மாட்டாது; கெட்ட மரம் நல்ல கனிகளை கொடுக்க மாட்டாது" (7:16-18). இங்கே மறுபடியும் உருவகமாக ஒரு* ***மரத்தையும் அதின் கனியையும்*** *பயன்படுத்துகிறார். இந்த வாக்கியம் நேரடியாக பரிசேயர்களுக்கு குறிப்பிட்டு சொல்லப்பட்டது. அவர்கள் தங்களுடைய பொல்லாத இருதயத்திலிருந்து பொல்லாத குற்றச்சாட்டை இயேசுவுக்கு விரோதமாகக் கொண்டு வந்தார்கள், அவர் பிசாசின் வல்லமையினாலே பிசாசுகளை துரத்துவதாகச் சொன்னார்கள். தள்ளுபடியாகமத்தில், சிராக் 27:6ல், "அதின் கனிகள் ஒரு மரத்தின் அறுவடையை வெளிப்படுத்துகிறது; அதே போல ஒரு மனுஷருடைய பேச்சு அவனுடைய மனதின் அறுவடையை வெளிப்படுத்துகிறது"* (NRSV) *என்று சொல்லப்படுகிறது.*

***வசனம் 34.*** *இயேசு தம்மைக் குற்றப்படுத்தினவர்களை* ***விரியன் பாம்புக்குட்டிகளே*** *என்று சொன்னார். தம்மிடத்தில் யோர்தானில்*

ஞானஸ்நானம் பெறும்படி வந்த பரிசேயர்களையும் சதுசேயர்களையும் பார்த்து யோவான் ஸ்நானகன் இதே வார்த்தைகளைச் சொன்னான் (3:7). "குட்டிகள்" எனும் வார்த்தை கிரேக்க மொழியில் (*gennēma*) என்பதை "சந்ததி" என்றும் மொழிபெயர்க்கலாம் (காண்க 23:29-33). "விரியன் பாம்பு" எனும் பதம் (*echidna*) என்பது விஷம் மிகுந்த அநேக பாம்பு வகைகளை மத்திய தரைகடல் பகுதியில் இருந்தவைகளைக் குறிப்பிடலாம். மெலித்தா தீவில் பவுல் விறகுகளை பொறுக்கிக் கொண்டிருந்த போது இந்த வகைப் பாம்பால் அவர் கடிக்கப்பட்டார் (நடபடிகள் 28:3-6). அப்படிப்பட்ட பாம்பின் கடி மிகுந்த வலியையும் மரணத்தைக் கூட வருவிக்கும்.

விரியன் பாம்புக்குட்டிகளைப்போன்ற, சாவுக்கேதுவான விஷமிகளான பரிசேயரும் கூட்டத்தாரோடே பயணம் பண்ணி, தங்களுடைய விஷம் போன்ற மனிதனால் புனையப்பட்ட உபதேசங்களை உமிழ்கிறார்கள் (23:15). அவர்களுடைய ஒழுங்கற்ற உபதேசம் அவர்களுக்கு செவிகொடுப்போரின் இருதயங்களை விஷமாக்கி தேவனுடைய சத்தியத்துக்கு எதிராக அவர்களுடைய மனதை அடைத்துக்கொள்ளச் செய்தது.

தமக்கு விரோதமாகப் பேசின அவர்களுடைய வார்த்தைகளே அவர்களை நியாயத்தீர்க்கக் கூடியதாக இருக்கிறது என்று இயேசு காண்பித்தார். அவர், **நீங்களே பொல்லாதவர்களாயிருக்க, நலமானவைகளை எப்படி பேசுவீர்கள்? இருதயத்தின் நினைவினால் வாய்பேசும்** என்றார். அவர்கள் பயபக்தியான நடைகளைக் காட்டினர் ஆனால் அவர்கள் வாயினாலே ஒழுங்கீனமான இருதயத்திலிருந்து வரும் வார்த்தைகளால் சாட்சியிட்டனர் (காண்க 15:18, 19).

**வசனம் 35.** கிரேக்க வார்த்தையான *thēsauros* **பொக்கிஷத்தையோ** அல்லது அது வைக்கப்படும் இடத்தையோ - பெட்டகம் அல்லது ஒரு "சேமிப்பு பெட்டியையும்" குறிக்கும் (2:11; 6:19, 20 விளக்கவுரையைக் காண்க). ஒரு மனிதனுடைய இருதயத்தில் சேர்த்து வைக்கப் பட்டிருப்பது எதுவோ அதுவே அவனுடைய வாயிலிருந்து புறப்படும். ஒருவர் **நல்ல** எண்ணங்களை மற்றும் வார்த்தைகள் அவருடைய இருதயத்தில் கொண்டிருப்பாரேயாகில் அதைத்தான் அவர் பேசுவார். மறுபடியும் பார்த்தால் **பொல்லாங்கினால்** ஒருவர் தனது இருதயத்தை நிறைத்திருப்பாரேயாகில், அவைகளைத்தான் அவர் பேச முடியும், ஒரு மனிதன் தன் இருதயத்தில் எப்படியிருக்கிறான் என்பதை அவனுடைய வாய் அடிக்கடி வெளிப்படுத்தும் (நீதிமொழிகள் 4:23, 24ஐக் காண்க).

**வசனம் 36, 37. தம்முடைய வார்த்தைகளுக்கு செவி கொடுத்தவர்களிடம் இயேசு எச்சரித்து, அவர்கள் பேசும் வீணாண வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும்** என்று சொன்னார். "வீணாண வார்த்தை" எனும் பதம் (*argos*) "கவனக்குறைவான வார்த்தை" அல்லது "பயனற்ற வார்த்தை" என்றும் பொருள்படும் விதமாக மொழிபெயர்க்கலாம். இன்று ஜனங்கள் பொதுவாக நினைக்கிற (சும்மா) "வெறும்" வார்த்தையை இயேசு குறிப்பிடவில்லை, மாறாக, அவர் தந்திரமான, தீமையான, புறங்கூறுகிற வார்த்தைகளையே குறிப்பிடுகிறார்.[6] அப்படிப்பட்ட பிரயோஜனமற்ற வார்த்தைகள் எந்த நன்மையையும் செய்வதில்லை, மாறாக நியாயத்தீர்ப்புக்கு அவைகள் கொண்டு வரப்படும்.

ஒரு தனிப்பட்ட நபருடைய வார்த்தைகள் அவரை **நீதிமானாக்கக் கூடும்** அல்லது **ஆக்கினைக்குள்ளாக்கும்.** ஒருவருடைய வார்த்தைகள் அவருடைய உண்மையான நடத்தையை வெளிப்படுத்தும் மற்றும் அதுவே நியாயத்தீர்ப்புக்கு அஸ்திபாரமாக தேவனுடைய விசாரணைக் கூடத்தில் விளங்கும்.

✧✧✧✧✧ **பாடங்கள்** ✧✧✧✧✧

## நீதியுள்ள நியாயத்தீர்ப்பு (12:22-30)

கிறிஸ்துவுக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன், ஏசாயா தீர்க்கதரிசி பின்வரும் மனவெழுச்சியுண்டாக்கும் வார்த்தைகளை பேசினார்: "தீமையை நன்மையென்றும் நன்மையைத் தீமையென்றும் சொல்லி; இருளை வெளிச்சமும், வெளிச்சத்தை இருளுமாக பாவித்து; கசப்பைத் தித்திப்பும், தித்திப்பைக் கசப்புமென்று சாதிக்கிறவர்களுக்கு ஐயோ!" (ஏசாயா 5:20). பரிசேயர்கள் பரிசுத்த ஆவியின் வல்லமையை தவறாக பிசாசுகளின் தலைவனாகிய பெயெல்செபூலுக்குரியதாக்கினபோது, புரட்டப்பட்டத் தீர்ப்பை விளங்கப் பண்ணினார்கள். இதற்கு முரணாக நாம் நமது அன்றாடக் காரியங்களில் நீதியுள்ள தீர்ப்பை விளங்கப் பண்ணவேண்டும். நாம் எந்த முடிவையும் எடுப்பதற்கு முன் உண்மைகளை கண்டறிந்து நியாயமாக மதிப்பீடு செய்து நம் முன் உள்ள சாட்சியங்களைக் கொண்டு முடிவுக்கு வரவேண்டும். நாம் முன் கூட்டியே மனதில் ஒன்றை வைத்துக் கொண்டு, சுய விருப்பத்துக்கு இடமளித்து, ஒருதலை பட்சமாக நமது முடிவுகளை ஓர வஞ்சனையுடன் எடுத்து விடக் கூடாது. இயேசு போதித்தார்: "தோற்றத்தின்படி தீர்ப்பு செய்யாமல் நீதியின்படி தீர்ப்பு செய்யுங்கள்" (யோவான் 7:24).

டேவிட் ஸ்டீவர்ட்

## "பிரிந்திருக்கும் வீடு" (12:25)

"பிரிந்திருக்கும் வீடு" எனும் உதாரணம் ஆபிரகாம் லிங்கன் தனது மிகவும் புகழ்பெற்ற பேச்சுக்களில் ஒன்றில் அதைப் பயன்படுத்தினார் என்பதை அடிக்கடி அவருக்குரியதாக்குவதுண்டு. அப்பொழுது லிங்கன் ஒரு சட்டமன்ற மேலவைக்குழு உறுப்பினராக இருந்தார். ஆனால் அவர் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஜனாதிபதியாக பின்னதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். "தனக்குத்தானே பிரிந்திருக்கும் எந்த வீடும் நிலை நிற்காது. இந்த அரசு பாதி அடிமைகளையும் பாதி சுதந்தரவாளிகளையும் நிரந்தரமாக கொண்டிருக்குமானால், அது நிலைத்திராது[7] என்று நான் நம்புகிறேன் என்றார்." லிங்கன் ஒரு ஒப்புக்கொடுத்த வேதாகம வாசிப்பாளர். இப்படியாக இந்த வார்த்தைகளை அவர் இயேசுவிடமிருந்து பெற்றார்.

கர்த்தருடைய கருத்து என்னவெனில் பிரிவினை எந்த ஸ்தாபனத்தையும் குலைத்து விடும். உள்நாட்டுச் சண்டைகள் அநேக நாடுகளை துண்டாடியதோடு அவைகளின் வீழ்ச்சிக்கும் வழிகோலியது. ஒரு சமுதாயத்துக்குள்ளாகவோ உள்ளூர் சபைக்குள்ளாகவோ, அல்லது ஒரு குடும்பத்துக்குள்ளாகவோ ஏற்படும்

*பிரிவினை ஒரு எதிர்பாராத பேராபத்தை விளைவித்து விடும். மாற்றாக, கிறிஸ்தவர்கள் முன்மாதிரியான பிரஜைகளாக, சபை அங்கத்தினர்களாக, குடும்ப அங்கத்தினர்களாக வாழ்வதன் மூலம் ஐக்கியத்தை ஏற்படுத்தக் கூடும் (1 பேதுரு 2:17; எபேசியர் 4:3; 5:22-6:4).*

## *பலவானைக் கட்டுதல்*
## *(12:29)*

*பிசாசைத் துரத்தியதால், இயேசுவுக்கு சாத்தானின் மேலிருந்த தமது அதிகாரத்தை விளங்கப் பண்ணினார்; அவர் பலவானை கட்டி அவனுடைய வீட்டை கொள்ளையிட்டார். இன்றைக்கு, உலகத்திலுள்ள அனைத்து பொல்லாதவைகளையும் கண்டு உற்சாகமிழந்து போவது எளிது. "உலகத்தில் இருப்பவர்களைக் காட்டிலும் உங்களில் இருப்பவர்" "பெரியவர்" என்பதை நாம் மனதில் வைக்க வேண்டும் (1 யோவான் 4:4). புகழ்பெற்ற ஒரு பாடல் ஞாபகத்துக்கு வருகிறது, "தவறானவை பெரும்பாலும் பலமானதாகத் தோன்றினாலும், இன்னமும் தேவனே ஆளுகிறார்."[8] பவுல், "தேவன் நம் பட்சத்திலிருந்தால், நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?" (ரோமர் 8:31; NIV) என்று எழுதினார். "ஒருவரும் தேவனும் பெரும்பான்மையாகும்" என்று சொல்லுவதுண்டு.[9] சாத்தான் அழிவுக்கு உட்பட்டுள்ளான் என்பதை நாம் மனதில் வைக்க வேண்டும்; அவனுடைய முழுமையான வழி முத்திரை வைக்கப்பட்டு விட்டது (வெளிப்படுத்தின விசேஷம் 20:10).*

*டேவிட் ஸ்டீவர்ட்*

## *வீணான வார்த்தைகள்*
## *(12:36, 37)*

*ஒரு மனிதன் பொது இடங்களில் தனது வார்த்தைகளை கவனமாக பாதுகாக்கலாம், ஆகிலும் தனிப்பட்ட இடங்களில் (நேரங்களில்) பாதுகாப்பு இழந்து தீமையாகப் பேசி, அசுத்தமான வார்த்தைகளை பிரயோகிப்பார். யாக்கோபு எழுதினார்,*

> *நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது; அது அடங்காத பொல்லாங்குள்ளதும் சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமாயிருக்கிறது. அதினாலே நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம்; தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷனை அதினாலேயே சபிக்கிறோம், துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது. என் சகோதரரே இப்படியிருக்கலாகாது, ஒரே ஊற்றுக் கண்ணிலிருந்து தித்திப்பும் கசப்புமான தண்ணீர் சுரக்குமா? (யாக்கோபு 3:8-11).*

*தேவன் நமது பேச்சுக்களைக் கட்டுப்படுத்துகிறார், நாம் பேசுகிற வார்த்தைகளுக்கு நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும். நம்முடைய வாயிலிருந்து வருகிற ஒவ்வொரு வார்த்தையையும் தேவன் கேட்கிறார் என்று விசுவாசிப்போமானால், நாம் என்ன பேசுகிறோம் எப்படி பேசுகிறோம் என்பது என்ன வித்தியாசத்தை ஏற்படுத்தப் போகிறது! நம்முடைய வார்த்தைகள் மற்றவர்களை இவ்வுலக வாழ்க்கையில் பாதிக்கையில் மற்றவர்கள் நம்மை*

மிகவும் மோசமாக நினைக்க வைக்கும், அது மாத்திரம் நமது வீணான பேச்சுக்குக் கிடைக்கும் அபாயமல்ல. உண்மையான பயமுறுத்தல், இயேசு குறிப்பிட்டபடி, பெரிதான நியாயத்தீர்ப்பு நாளிலே தேவனுக்கு முன்பாக நாம் நிற்கும்போது அந்த வார்த்தைகளுக்காக கிடைக்கும் விளைவுகள் தான். நம் பேச்சு ஒன்று நம்மை ஆக்கினைக்குள்ளாக்கும் அல்லது நீதிமானாக்கும்.

---

குறிப்புகள்

[1]காண்க *Psalms of Solomon* 17.21. [2]யூதர்களுக்குள் இருந்த மற்றவர்கள் இயேசுவின் பெயரை அழித்து (யோவான் 7:20; 8:48, 52; 10:20). பைத்தியகாரன் பிசாசு பிடித்தவன் என்றார்கள். (Talmud *Sanhedrin* 43a; 107b; Justin Martyr *Dialogue with Trypho* 69; Origen *Against Celsus* 1.28.) [3]Craig S. Keener, *A Commentary on the Gospel of Matthew* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1999), 363. [4]உதாரணமாக யூதமத பேயாட்டுமுறைக்கு மாற்கு 9:38; நடபடிகள் 19:13-16; Josephus *Antiquities* 8.2.5; *Wars* 7.6.3; Justin Martyr *Dialogue with Trypho* 85; Irenaeus *Against Heresies* 2.6.2. ஆகியவற்றைக் காணவும். [5]J. W. McGarvey, *The New Testament Commentary*, vol. 1, *Matthew and Mark* (N.p., 1875; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.), 110. [6]H. Leo Boles, *A Commentary on the Gospel According to Matthew* (Nashville: Gospel Advocate Co., 1936), 273. [7]Abraham Lincoln, speech delivered to the Republican State Convention, Springfield, Illinois, 16 June 1858. [8]Maltbie D. Babcock, "This Is My Father's World," *Songs of Faith and Praise*, comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994). [9]Frederick Douglass (http://quotationsbook.com/quote/17251/; Internet, accessed 8 March 2010).